## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.என்.காத்தையன், உதவி பயிற்சி அலுவலர் அவர்களின் மகன் திரு.கா.அலெக்சாண்டர் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(பி2)த்துறை**

அரசாணை (4ப) எண். 9 நாள் 03.12.2020

சார்வரி வருடம் – கார்த்திகை 18,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
3. இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் ந.க.எண்.42528/பஅ3/2016, நாள் 05.12.2019 மற்றும் 07.09.2020.

------

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடிதங்களில், நாகப்பட்டினம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உதவி பயிற்சி அலுவலராக பணியாற்றிய போது பணியிடை மரணமடைந்த திரு.என்.காத்தையன், உதவி பயிற்சி அலுவலர் அவர்களின் மகன் திரு.கா.அலெக்சாண்டர் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் 28.02.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்நிலை அலுவலகமான கோட்டூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 05.03.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்து, தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய தேவை எழாததால், அக்கருத்துருவை ஏற்று பணியிடை மரணமடைந்த திரு.என்.காத்தையன்,

த.பி.பா.,